புதுமலர்: 12 இதழ்: 06 கார்த்திகை - மார்கழி

# அனல்

ஆசிரியர்: வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே அனலாயிருங்கள்

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

– ரோமர் 12:11 –

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01.11.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்



- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - உனக்கு உதவியவர்களை மறவாதே
- வாலிபர் வளாகம் - எழுப்புதலுக்கான இதயக்கதறல் - பாகம் 3
- உண்மையான ஆறுதல்
- பெண்கள் பக்கம் - பார்த்தாள், பறித்தாள், புசித்தாள்!
- நற்செய்திப்பகுதி - என்னுடைய மூச்சுக் காற்று
- பக்தர்களின் பயிலகம்
- குறுக்கெழுத்துப் போட்டி - 70
- சந்தோசம் இல்லை! யார் காரணம்?
- வினா விடை - 72
- அருட்பணியாளர் சரிதை - ஜான் ஸ்கடர், கர்த்தார் சிங்
- அனலின் ஆன்மீக விருந்து
- தேவன் தந்த வைரங்கள்




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

## எழுத வேண்டிய விலாசம்




**சீயோன் ஜெபக்குழு,**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.



**ஆசிரியர் "அனல்",**
**347 நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி. நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் குரல்

தேவனுடைய மகத்தான கிருபையால் ஆண்டின் கடைசி சஞ்சிகையூடாக உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. இவ்வருடம் முழுவதும் சஞ்சிகை வெளிவருவதற்கு பேருதவி புரிந்த தேவனுக்கு முதற்கண் நன்றிகள். வாசகர்களாகிய நீங்கள் நல்கிய ஆதரவுகளுக்காவும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்தும் வரப்போகும் புதிய வருடத்திலும் இன்னும் அதிகமாக உங்கள் ஆதரவினை எதிர்பார்க்கின்றோம். இச் சஞ்சிகை மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளை எமக்கு எழுதுங்கள். தேவனுடைய நாமம் மகிமைப்படட்டும்.

புதிய ஆண்டுக்குள் பிரவேசிக்க இருக்கும் அருமைச் சகோதர சகோதரிகளே இவ்வாண்டில் நீ எப்படிப்பட்ட வேதனைகளுக்கெல்லாம் முகம் கொடுக்க வேண்டி வந்தது. ஒருவேளை உன் பாடுகளை உன்னோடு இணைந்து சுமப்பதற்கு இன்னொருவர் உதவி செய்யாது போயிருக்கலாம். ஆனால் ஒரு நல்ல காரியம்; தேவனுடைய வார்த்தை சொல்கிறது; "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்." (எசா. 53:4) உனக்கு வரவேண்டிய வேதனைகளை பாவத்தின் தண்டனைகளை. உன் துக்கங்களை இயேசு சுமந்து விட்டார். இன்றே உன் வாழ்வில் இயேசுவுக்கு இடம் கொடு. வரும் புதிய ஆண்டில் அவர் தரும் சந்தோசத்தை நீ பெற்றுக்கொள்வாய்.

ஆண்டவரின் சமாதானம் உங்களோடு இருப்பதாக

- ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




○ வை.விமலதாஸ்

ஸ்ரீபன் தனது பட்டப்படிப்பை நிறைவு செய்து வேலை தேடிக் கொண்டிருந்த போது முதலாவதாக பெரிய நிறுவனம் ஒன்றிலே அவனுக்கு கிடைத்த வேலை வாய்ப்பிற்காக நேர்முகத்தேர்விற்குச் சென்றிருந்தான். அங்கே நேர்முகத் தேர்வினை நடத்திக் கொண்டிருந்த அதிகாரி அந்த ஸ்ரீபனிடம பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவ்வாறு அவர் கேட்ட கேள்வி களில் ஒன்று உன்னுடைய பெற்றோர் என்ன வேலை செய்கின்றார்கள்? அதற்கு அந்த ஸ்ரீபன் சொன்னான்: எனது பெற்றோர் உடைகளை சலவை செய்யும் வேலை செய்கின்றார்கள். மற்றவர்களுடைய உடைகளை கழுவி அவற்றை சுத்தம் செய்து சம்பாதிக்கும் வேலை செய்கின்றார்கள் என்று சொன்னான். அதற்கு அந்த அதிகாரி: உன்னுடைய பெற்றோர் இந்த வேலையை செய்து தான் உன்னை இவ்வளவு படிக்க வைத்தார்களா? மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றதே! இந்த வருமானத்தில் நீ இவ்வளவு படித்திருக்கின்றாயே என்று கூறினார்.

அப்போது அந்த ஸ்ரீபன் சொன்னான்: ஆம் ஐயா அந்த வேலை செய்து தான் என்னைப் படிக்க வைத்தார்கள் என்றான். அதற்கு அந்த அதிகாரி கேட்டார்: நல்லது நீ எப்போதாவது உன்னுடைய பெற்றோருக்கு உதவி செய்திருக்கின்றாயா?, அவர்கள் துணி துவைக்கும் வேலையில் நீ உதவி செய் திருக் கின்றாயா? அல்லது அந்த வேலையை எப்போதாவது அவர்களுடன் சேர்ந்து செய்திருக்கின்றாயா? என்று கேட்டார். அதற்கு ஸ்ரீபன் சொன்னான்: இல்லை ஐயா, நான் ஒருபோதும் உதவி செய்யவில்லை. ஏனென்றால் என்னுடைய பெற்றோர் நான் தங்களுக்கு உதவி செய்வதை ஒரு போதும் அனுமதிப்பதில்லை, அத்தோடு சிறு பிராயத்திலிருந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வார்கள்: நீ உன்னுடைய படிப்பை மாத்திரம் பார்த்துக் கொள், நன்றாக கவனமாக படித்துக் கொள். நாங்கள் வேலை செய்து சம்பாதித்து உன்னைப் பார்த்துக் கொள்கின்றோம் என்று சொல்வார்கள். அதனாலே நான் அவர்களுக்கு உதவி செய்ததும் கிடையாது, அவர்களது வேலை செய்யும் இடத்தின் பக்கமே நான் சென்றது கிடையாது, அவ் வேலை எப்படி இருக்கும் என்பதும் எனக்குத் தெரியாது என்று சொன்னான்.

உடனே அந்த அதிகாரி சொன்னார்: உனக்கு இன்றைக்கு ஒரு பரீட்சை வைக்கப் போகின்றேன், நீ வீட்டுக்குச் சென்று இன்று உன் பெற்றோரின் கைகளுக்கு நன்றாக எண்ணை பூசி அந்த கைகளுக்கு நன்றாக மசாச் செய்து விட்டு நாளை வா என்று அனுப்பி வைத்தார். அப்போது ஸ்ரீபனுக்கு மிகவும் குழப்பமாக இருந்தது. ஐயா! நான் வேலை தேடித்தானே வந்திருக்கின்றேன், ஏன் என்னை இப்படிச் செய்யச் சொல்கின்றீர்கள் என்று கேட்டான். அதற்கு அந்த அதிகாரி சொன்னார்: இல்லை நான் சொன்னதைப் போன்று செய்துவிட்டு நாளை மறுபடியும் வா என்று சொன்னார். அப்படியே ஸ்ரீபனும் வீட்டுக்கு வந்து தன் பெற்றோரிடம் அந்த நேர்முகத் தேர்வில் நடைபெற்ற காரியங்களை கூறினான். அனேக கேள்விகளைக் கேட்டார்கள், அனைத்திற்கும் சரியாக மறுமொழி கூறினேன். ஆனாலும் அந்த அதிகாரி இறுதியாக சொன்ன காரியத்தையும் நான் செய்தேயாக வேண்டும். எனவே உங்கள் கைகளை காட்டுங்கள் அதற்கு நான் எண்ணை தடவி மசாச் செய்துவிட வேண்டும் என்று சொன்னான். அதற்கு அந்தப் பெற்றோர் அவனை தடுத்தார்கள், அப்படி எல்லாம் நீ செய்ய வேண்டாம், அதனை நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம். ஆனாலும் ஸ்ரீபன் விடவில்லை. இல்லை இல்லை நீங்கள் உங்கள் கைகளைக் காண்பியுங்கள் என்று கூறி அந்த கைகளுக்கு எண்ணை தடவி மசாச் செய்ய ஆரம்பித்தான்.

அப்போது தான் அவன் தன் பெற்றோரின் கைகளில் புண்கள் இருப்பதனை அவதானித்தான். பல வருடங்களாக துணிகளை துவைத்து துவைத்து கஸ்டப்பட்டதினாலும், காரம் மிகுந்த சவர்க்காரங்களையும் சலவைத் தூள்களையும் பாவித்ததினால் கைகள் எல்லாம் மரத்துப் போய் அதிகமான காயங்கள் ஏற்பட்டிருப்பதனைக் கண்டான். அதனால் ஸ்ரீபன் மிகுந்த துக்கத்திற்குள்ளானான். அந்த கைகளைப் பார்த்த போது ஆங்காங்கே அந்த கைகளில் உரசல் காயங்கள் காணப்பட்டது. அதனைத் தொட்டுப் பார்த்த போது அவன் கரங்களில் கண்ணீர் வடிய ஆரம்பித்தது. அவன் பயங்கரமாக கண்ணீர் வடித்து அழ ஆரம்பித்தான். உடனே அவனுடைய பெற்றோர் அவனை சமாதானம் செய்ய முற்பட்டனர். ஆனால் ஸ்ரீபன் அப்போது சொன்னான்: நீங்கள் எவ்வளவு கஸ்டப்பட்டு என்னைப் படிக்க வைத்திருக் கின்றீர்கள், உங்கள் கைகளைப் பாருங்கள், எவ்வளவு காயப்பட்டு இருக்கின்றது, இதனை இவ்வளவு நாட்களும் நான் பார்க்காமல் இருந்துவிட்டேனே, இவ்வளவு நாளும் நீங்கள் படுகின்ற கஸ்டங்களைக் குறித்து சிந்திக்காமல்விட்டுவிட்டேனே என்று தேம்பித் தேம்பி அழுதான். அன்றைக்குத் தான் ஸ்ரீபன் உணர்ந்து கொண்டான், தனது பெற்றோர் எவ்வளவு கஸ்டப்பட்டு தன்னைப் படிக்க வைத்திருக்கின்றார்கள் என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் காலையிலேயே எழுந்து அழகாக உடுத்திக் கொண்டு மறுபடியும் அந்த கம்பனிக்கு நேர்முகத்தேர்விற்காக சென்றான். அங்கே இருந்த அந்த அதிகாரி அவனை கேட்டார், எப்படி நான் கூறிய காரியத்தை நேற்று வீட்டிற்குச் சென்று செய்தாயா என்றார். அதற்கு ஸ்ரீபன் ஆம் ஐயா! நேற்று நான் அதனைச் செய்தேன். இன்றைக்கு நான் உணர்ந்து கொள்கின்றேன், இந்த அளவுக்கு நான் படித்து முன்னேற்றம் அடைவதற்கும், இப்படிப்பட்ட பெரிய நிறுவனத்தில் வேலைக்காக நேர்முகத்தேர்வில் தோற்றுவதற்கும் எனக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தது எனது பெற்றோரின் கடுமையான வேலைதான், அவர்களுடைய அர்ப்பணிப்புத் தான். அவர்கள் எவ்வளவோ கஸ்டப்பட்டு, தங்களை வருத்தி எனக்காக எல்லா கஸ்டங்களையும் தாங்கி இன்று வரை அந்த கஸ்டங்களை நான் அறிந்து கொள்ளாதபடி பார்த்துக் கொண்டார்கள். அவர்களுத் தான் நான் இந்த அளவுக்கு வந்ததற்குரிய பெருமை எல்லாம் சேரவேண்டும் என்று சொன்னான்.

அப்போது அந்த அதிகாரி சொன்னார், ஆம் அதனை நீ உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் உன்னை அப்படிச் செய்யும்படி கூறினேன். நீ எப்போது உனக்காக மற்றவர்கள் செய்யும் வேலைகளை, அர்ப்பணிப்புக்களை, உதவிகளை உணர்ந்து கொள்கின்றாயோ அப்போது தான் நீ மற்றவர்களுக்கு அதிகாரியாக இருக்க முடியும். நீ உயர்ந்த நிலைக்கு வரவேண்டுமாயிருந்தால் மற்றவர்கள் உனக்காக செய்கின்ற காரியங்களை உணர்ந்து கொள்ளக்கூடியவனாக இருக்க வேண்டும். அதற்காகத் தான் இந்த பரீட்சையை நான் வைத்தேன் என்றார். அப்போது தான் ஸ்ரீபன் உணர்ந்து கொண்டான், இதுவரை அவனுடைய நலனுக்காக, அவன் நன்றாக வாழ வேண்டும் என்பதற்காக அவனுடைய பெற்றோர் செய்த வேலைகளையும் பிரயாசங்களையும் தான் அறிந்து கொள்ளாமல் வாழ்ந்துவிட்டேனே என்று வருத்தப்பட்டான். அந்த வருத்தம் இனி அவன் மற்றவர்களை கவனிக்காமல் இருக்கமாட்டான் என்பதனை வெளிப்படுத்தியது.

இந்த வருடத்தின் இறுதிப்பகுதியில் வந்திருக்கும் நாங்களும் சற்று எம்முடைய வாழ்க்கையை பின்னோக்கி பார்ப்போம். நாம் இவ்வளவுக்கு உயரத்தில் இருப்பதற்காக எமக்காக எத்தனையோ பேர் கஸ்டங்களையும் தியாகங்களையும் அனுபவித்திருப் பார்கள். எமது பெற்றோர் எம்மை நன்றாக வளர்த்துவிட வேண்டியது அவர்களது கடமை என்றாலும் அந்த கடமைக்காக எவ்வளவு கஸ்டப்பட்டிருப்பார்கள். அவர்களது கஸ்டங்களையும் தியாகங்களையும் புரிந்து கொள்கின்றோமா? அவர்களை கனப்படுத்தி அன்பாக பேசியிருக்கின்றோமா? அவர்களைப் போன்று எம்மை வழிப்படுத்திய ஒவ்வொருவரையும் நாம் நினைத்துப் பார்க்கின்றோமா? வரப்போகும் புதிய வருடத்தில் புதிய மனிதர்களாய் கடந்து செல்வோமா? **எபிரெயர் 10:32a முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள். எபிரெயர் 13:7 தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




○ போதகர் வேதநாயகம் சுமணன்



**கிறிஸ்துவுக்குள் பிரியமான உள்ளங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!**

ஆண்டவரின் பெரிதான கிருபையினால் இந்த வருடம் (2015) இறுதி மட்டும் சுகபத்திரமாய் கண்மணி போல தேவன் உங்கள் ஒவ்வொருவரையும் பாதுகாத்து பராமரித்து வந்ததற்காய் அவருக்கு நன்றி கூறுகின்றேன்.

அருமைத் தம்பி / தங்கையரே! இவ்வாண்டு உன் வாழ்வில் நடந்த மறக்க முடியாத காரியம் என்ன? அல்லது மறக்க முடிந்த காரியம் என்ன? யோசித்துப்பார்! உன் இதய நினைவுகளின் எண்ண அலைகள் எவற்றிலே பெரிதும் ஈடுபாடாய் இருக்கின்றது?

---

"உன் இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக் கொள்! அப்பொழுது அதினிடத்திலிருந்து ஜீவ ஊற்று புறப்பட்டுவரும்". அனேக மக்களை அது தாகம் தீர்க்கும், வறண்ட இடங்களைச் செழிப்பாக்கும். குற்றுயிராய் கிடப்பவை ஜீவனடையும்! அசதியாய் இராதே தேவ பிள்ளையே!.

---

**மெய்யான எழுப்புதலுக்கான வேதாகம ஒழுங்கு/தேவனின் வழி**

## சிலுவையைக் கிட்டிச் சேருங்கள்

பரிசுத்தமாகவும், பிறருக்குப் பயனள்ளவர்களாகவும் வாழ வேண்டுமானால் கிறிஸ்துவின் சிலுவையை நெருங்கி வாழ வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிலுவை என்பது வல்லமையின் இரகசியமாய் இருக்கின்றது". கிறிஸ்து சிலுவையில் மரித்தார்: மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். அவரின் வல்லமை பெரியது! மகத்தானது!. இதன் உதவியால் நாம் போரில் ஜெயம் கொள்ளலாம். எந்த ஒரு ஆயுதமும் இதற்கு எதிராக முன்னேற முடியாது. யாதொரு சத்துருவும் இதை மேற்கொள்ள முடியாது. நாம் நல்ல போராட்டத்தை போராட முடியும். சத்துருவுடைய சகல காரியத்தை எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடிக்க திராணியுள்ளவர்களாய் நிற்கவும் முடியும், போராட்டத்தை போராடவும், ஓட்டத்தை முடிக்கவும், விசுவாசத்தைக் காத்துக் கொள்ளவும் இது வழிவகுக்கிறது.

---

சிலுவை எதைக் காண்பிக்கின்றது. பிதாவின் சித்தத்தை, தன்னைப் பிரியப்படுத்தும் ஓர் வாழ்விற்கு முற்றுப்புள்ளி, சத்துருக்களுக்காக ஜெபம், அன்பப்படுத்தி மரண ஆக்கினை செய்தவர்களை மன்னித்து (மன்னிப்பின் மகுடம்) விடுதல், தேவனுடைய வேலைக்காக அவமானமடையவும், இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து எகிப்தின் பொக்கிசங்களிலும், கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியம் என்று எண்ணவும் முன்வருவோமாக.

---

**ரோமர் 6:6 நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.**

**கலாத்தியர் 2:20 கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்: ஆயினும், பிழைத்திருக்கிறேன்: இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்: நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.**

## சுவிசேஷ விதையை விதைத்தல்

"சுவிசேஷ விதை தரம் வாய்ந்தது என்பதற்கு தேவன் சாட்சியாயிருக்கின்றார்". அது கெட்டுப்போகவில்லை. அது முளைக்கும் திறனுடையது, ஆயினும் எல்லா சுவிசேஷ விதைகளும் முளைப்பதில்லை. சிலதை பறவைகள் உட்கொள்கின்றன, மேலும் சில வேர் ஆழமாக செல்ல முடியாத இடங்களில் விழுகின்றன. சில விதைகள் முளைத்தும் சூரிய வெப்பத்தால் உலர்ந்து மடிந்து போகின்றன. "ஆகிலும் அதிக விதைகளை விதைத்தால் அதிக பலனைப் பெறுவோம்". போதுமான விதைகளை விதைப்போமானால் ஒரு அறுவடை தேவனுடைய நிலத்தில் நடைபெறுவது நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் விதைத்த விதை முளைக்கவில்லை என்று பாரப்பட வேண்டாம். ஒவ்வொரு விதையும் முளைப்பதும், வளருவதும், கனி கொடுப்பதும் தேவனுடைய நியமத்தைச் சார்ந்தது. இதுவரை நாம் தேவனைப்பற்றி கூறிய இடங்களில் சிலர் எதிர்த்திருக்கலாம், அல்லது கேட்காமல் சென்றிருக்கலாம். ஆனால் பின் நாட்களில் அவர்கள் இரட்சிப்படைந்ததை கேள்விப்பட்டு சந்தோஷம் அடைவதுண்டு.

---

உன்னுடைய வேலை தம்பி தங்கையரே! சுவிசேஷ விதையை தூவு (விதை) எச்சந்தர்ப்பத்திலும். ஒரு பிறந்தநாள் கொண்டாட்டமாக இருக்கலாம், ஒரு மரண வீடாக இருக்கலாம். அல்லது உனக்கு கிடைத்த ஓர் நல்ல சந்தர்ப்பமாக இருக்கலாம், நிகழ்ச்சிகளாகலாம், பாடல் வேளையாயிருக்கலாம். மனிதனுடைய இருதயங்களே நிலங்களாகும். சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து நீ காத்திருக்காதே! நீயாகவே சந்தர்ப்பங்களை உருவாக்கி ஆண்டவர் இயேசுவின் தாகத்தை தீர்க்க விரைவாகவே செயற்படுவாயாக. நீ தேவன் சார்பில் செயற்படும் போது நிச்சயம் தேவன் உன் சார்பில் செயலாற்றுவார். சாத்தானின் கோட்டைகளை தகர்த்து ஆத்துமாக்களை தேவ ராஜ்யம் சேர்ப்போமாக.

---

**கிறிஸ்துவுக்காகவும் சுவிசேஷத்திற்காகவும் வாழ வருவாயா?**

## ஜெபமும் எழுப்புதலும்:

"சரித்திரத்திலோ, வேதாகமத்திலோ எழுப்புதல் ஏற்படக் காரணமாய் இருந்தவர்கள் தங்கள் இருதயங்களிலும் வாழ்விலும் தேவன் அசைவாடும்படி மிகுந்த வாஞ்சையோடு தனியாகவோ அல்லது குழுவாகவோ ஜெபித்திருப்பதைக் காணலாம்". அவருடைய முகத்தைத் தேடும் போது மாத்திரமே தேவன் தமது பிள்ளைகளை எழுப்புதலின் மூலமாக சந்திக்கின்றார் என்பதே வேத வசன ஆதாரமாகவும் சரித்திர உண்மையாயுமுள்ளது.

நான் வாசித்த புத்தகத்தில்: ருமேனியா தேசத்தின் எழுப்புதலின் விளைவுகளைக் கண்டேன். ஆலயங்கள் நிரம்பி வழிந்தன. மக்கள் தேவ வசனத்தின் வாஞ்சையால் அதிகாரங்களை மனப்பாடம் செய்து கொண்டு இருந்தனர். ஆலயங்களில் இட நெருக்கடி ஏற்பட்டது. காரணம்: மக்களை ஜெபிப்பதற்காக ஒன்றுகூட்டி பாவ உணர்வைக் குறித்தும், மனந்திரும்புதலைக் குறித்தும் பிரசங்கிக்கப்பட்டதே. மக்கள் கீழ்ப்படிந்தனர்: ஒரு ஜெப அசைவு ஏற்பட விரைவில் ருமேனியா முழுவதும் பரவியது எழுப்புதல். தம்பி தங்கையரே உன்னைக் குறித்து தேவன் வைத்திருக்கும் திட்டம் எழுப்புதலில் உன்னால் இயன்றதை அர்ப்பணிப்புடன் செயற்படுத்த கையளிப்பாயா? தேவ ஆவியானவர் கிரியை செய்ய நீ உன்னை அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எழுப்புதல் என்பது தேவ பிள்ளைகள் நடுவில் தேவனுடைய செயலாகும்". அது சுவிசேஷ ஊழியமல்ல. கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு கிறிஸ்துவை பிரசங்கிப்பதுமல்ல. அது அவரை அறிந்து அவரை நேசித்து அவரைப் பின்பற்றுகிறவர்கள் நடுவில் தேவனுடைய கிரியை என்று கூறலாம். எழுப்புதல் மூலம் தேவன் நமது இருதயங்களைப் புதுப்பிக்கிறார்.

**தேவன் தேவனாக அறியப்படும் பொழுது ஏற்படுவது எழுப்புதல்.**

## இறுதியாக பெற்றோர்களே! தேவ ஊழியரே!

வாலிபர் வளாகத்தினூடாக உங்களைச் சந்தித்தது மிக்க மகிழ்ச்சி. நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்காக ஜெபித்து தேவன் எவ்வழி நடத்த விரும்புகின்றாரோ அவ்வழிக்கே மனதின் நிச்சயத்துடன் பிள்ளைகளை மனப்பூர்வமாக ஒப்படையுங்கள். கல்வி, தொழில், குடும்ப வாழ்வு இவற்றில் உங்கள் சுய இச்சைக்கேற்ற காரியங்களை திணிக்கவோ, தலையிடவோ வேண்டாம். ஆயினும் கண்டிப்புடனும், ஒழுக்கத்துடனும் நடத்துங்கள். வேதம் சொல்கின்றது: **தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான் - நீதிமொழிகள் 29:15.**

யாரோடு பழகுகிறாய்? எதைப்பார்க்கிறாய்? எதைப் படிக்கிறாய்? எங்கு செல்கிறாய்? என்ற காரியத்தை தைரியமாகவே பிள்ளைகளிடம் கேளுங்கள்.

இன்றைய தலைமுறை விரும்புவதும் காணத்துடிப்பதுமான தலைமையான காரியம் என்னவெனில்: **"வாழ்ந்து காட்டிப் போதிக்கும் போதகமே"**. பெற்றோரே யாருக்குத் தெரியும் உன் வயிற்றில் பிறந்த பிள்ளை தேவன் பயன்படுத்தும் கனமான பாத்திரமாக வருங்காரியங்களில் திகழும். எழுப்புதலை வாஞ்சிப்போம்! இயேசுவின் வழி நடப்போம்!!.

அன்பின் வாசகர்களே!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ் வருடம் முழுவதும் கடக்க உதவி செய்த தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம். இச் சஞ்சிகை உங்களுக்கு இவ் வருடம் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்திருக்கும் என்று விசுவாசிக்கின்றோம். எதிர்வரப் போகும் புதிய வருடத்தில் உங்கள் பிரதிகளை சிரமமின்றி பெற்றுக் கொள்வதற்காக உங்கள் சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுமாறு நினைவூட்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையான ஆறுதல்!



○ ரேமா

**கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறது போல கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது — 11கொரிந்தியர் 1:5**

இயேசு கிறிஸ்து மெய்யாகவே எங்களுடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு நம்முடைய துக்கங்களை சுமந்தார். காரணம்: நவாழ்வையும்படியாக, மெய்யான சமாதானத்தை அடையும்படியாக, ஒரு பாவமும் செய்யாத பரிசுத்தமான ஆண்டவர் இயேசு தன்னுடைய சொந்த இரத்தத்தை சிந்த வேண்டியதாய் இருந்தது. காரணம்: **"நாம் உண்மையான ஆறுதலைப் பெறும்படியாக"** இன்று உன் மனதில் தேவன் அளிக்கும் உண்மையான ஆறுதல் உண்டா?

வாழ்க்கையில் வரும் சிறு சிறு பிரச்சினை, போராட்டங்கள், கஷ்டங்கள், மனக்கிலேசங்களைக் கண்டு அதைரியமடைந்துவிடாதே.

கிறிஸ்து பாடுபட்டதினால் உண்டான மீட்பு/இரட்சிப்பு உன் வாழ்வில் அனுபவிக்க தேவ ராஜ்யத்திலே பாடுகளுக்கு நீ பங்காளி ஆக வேண்டும். அப்பொழுது தான் உண்மையான ஆறுதலைப் பெறமுடியும்: அது பெருகும்.

வேதம் ஆண்டவரை இரக்கங்களின் பிதா என்றும் சகலவிதமான ஆறுதலின் தேவன் என்றுமே முழங்குகிறது. உன் வாழ்வின் சலக பகுதியிலும், எல்லா நேரத்திலும் ஆறுதல் அளிக்க (இன்ப, துன்ப, மரண) அவர் ஒருவரே போதுமானவராய் இருக்கின்றார்.


**ஒன்று செய், இன்றே: அவர் (இயேசு) உன் ஸ்தானத்திலே மரித்தார், உன் பாவங்களுக்காக அவரை உன் வாழ்வில் அங்கீகரித்து பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடு. தேவன் தரும் ஆறுதலை அசட்டைபண்ணாதே. அவரின் நாமத்திற்காய் பாடுபடும் போது சோர்ந்து போகாதே. அவராலே நிச்சயம் உன் வாழ்வில் ஆறுதல் பெருகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பார்த்தாள்! பறித்தாள்! புசித்தாள்! கொடுத்தாள்




○ திருமதி. J.பிலிப்

ஒரு அழகிய தோட்டத்தை சுற்றி பார்வையிட்டு வந்தாள் ஒரு ஸ்திரி. தீடிரென அவள் கால்கள் ஒரு இடத்தில் வந்ததும் நின்றுவிட்டது. சர்ப்பத்தின் வார்த்தையை கேட்டு இரண்டு கண்களினாலும் ஏறெடுத்துப் **பார்த்தாள்**. என்ன அழகான ஒரு கனி! பார்த்துக் கொண்டே இருக்கலாம் போன்று மிக அழகாக பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. என்னைப் பார்! என்னைப்பார்! என்பது போன்று இருந்தது. இப் பழமானது பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப் படத்தக்க விருட்சம் போன்று காணப்பட்டது. எதையுமே அவள் சிந்திக்கவில்லை. பார்த்தவுடன் பறிக்க வேண்டும் என்ற ஆவல் அவள் உள்ளத்திலே ஏற்பட்டது. பறித்துப் பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் அதனைப் **பறித்தாள்**. பறித்த பழத்தைப் பார்த்தவுடன் அது எப்படியான சுவையாக இருக்கும்? இனிக்குமா? புளிக்குமா? உறைக்குமா? கசக்குமா? என்ற எண்ணத்துடன் அதைப் புசித்துப் பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் அதைப **புசித்தாள்**. புசித்த சுவையின் நிமித்தம் தன்னுடைய கணவனுக்கும் இதைப் புசிக்க கொடுத்தாள்.

2015ஆம் ஆண்டு இன்னும் ஒரு சில நாட்களில் முடிவடையப் போகின்றது. இவ் ஆண்டின் கடைசி அனல் சஞ்சிகை உன் கரத்தில் இருக்கின்றது.

அப்பாடா ஒரு மாதிரியாக 2015ஆம் ஆண்டை கடக்கப் போகின்றேன் என்று சிந்திக்கும் சகோதரியே மீண்டும் ஒரு முறை 2015ஆம் ஆண்டு முழுவதும் உன்னுடைய வாழ்க்கைப் பயணத்தை ஆராய்ந்து 2016ஆம் ஆண்டிற்குள் நீ பிரவேசிக்க வேண்டும் என்று உன் தேவன் விரும்புகின்றார்.

ஜீவனுள்ளோருக் கெல்லாம் தாயான ஏவாளின் சம்பவம் தான் மேலே கூறப்பட்டுள்ளது. அவள்: **பார்த்தாள்! பறித்தாள்! புசித்தாள்! கொடுத்தாள்!** இதன் முடிவு தோட்டத்திலி ருந்து துரத்தப்பட்டாள் என வேதம் கூறுகின்றது. இதற்கு காரணம் என்ன? "தேவ கட்டளையை மீறியதின் நிமித்தம் துரத்தபபட்டாள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ கட்டளையை ஏவாள் மீற வேண்டிய சந்தர்ப்பம் தான் என்ன? "எந்த கனியை தேவன் காண்பித்து புசிக்க வேண்டாம் என்று கூறினாரோ அந்த கனி இருந்த இடத்திற்கே வந்து நின்றாள் ஏவாள். நின்றது மட்டுமன்றி, தந்திரமுள்ள சர்ப்பத்துடன் சம்பாசனையை வளர்க்கத் தொடங்கினாள்". தந்திரக்காரனுடைய கேள்விகளுக்கெல்லாம் பதில் கொடுக்க தொடங்கிவிட்டாள். தேவன் சொன்னது உண்டோ என்ற ஒரு சந்தேக கேள்வியை சர்ப்பம் கேட்டவுடன்: **ஆதியாகமம் 3:2 ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்:** அதன் பின்பு **ஆதியாகமம் 3:4 ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.** இருவருக்கும் மிக நெருக்கம் ஏற்பட்டுவிட்டது. தேவன் கூறியதற்கு எதிர் மாறாக சர்ப்பம்: நீங்கள் சாவதில்லை! தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றவுடன் ஏவாளுக்கும் ஒரு ஆசை ஏற்பட்டது. தேவன் கொடுத்த கட்டளையை அவள் மறந்து சர்ப்பத்தின் வஞ்சனையான பேச்சை நம்பி அந்த விருட்சத்தின் கனி புசிப்புக்கு நல்லது! பார்வைக்கு இன்பம்! புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று **பார்த்தாள்! பறித்தாள்! புசித்தாள்!** தன் புருசனுக்கும் கொடுத்தாள்.

'தேவனுடைய வழியை விட்டு அல்லது தேவ திட்டத்தைவிட்டு நம்மை விலகச் செய்யும்படி செயலாற்றுபவர்களுடன் கதைத்து நேரம் செலவிட்டால் நமக்கும் இப் பரிதாபகரமான காரியம் நிகழலாம்."

ஸ்திரியானவள் தேவன் விலக்கின விருட்சத்தின் கனி இருந்த இடத்திற்கு வராமல் தவிர்த்திருக்கலாம். அதுமட்டுமன்றி சர்ப்பத்துடன் சம்பாசனையில் கலக்காமலும் தவிர்த்திருக்கலாம். ஆனால் தந்திரமான சர்ப்பம் வழியில் ஸ்திரியை சந்திப்பதற்காய் காத்திருந்தது.

2015ஆம் ஆண்டில் நீ நடந்து வந்த வழியை ஆராய்ந்து பார்! எந்த இடத்தில் நீ தேவ கட்டளையை மீறி நடந்தாய். சர்ப்பம் ஏவாளை சந்தேக கேள்வியுடன் தான் வஞ்சித்தது. தேவன் உனக்கு கொடுத்த சபையின் சட்ட திட்டங்களைக் குறித்து யாரும் ஒருவர் கேள்வி எழுப்பிய வுடன் நீயும் கட்டளைகளை கைக்கொள்ளாமல் போன நேரங்கள் உண்டா?

தேவன்; கனியை புசிக்கும் நாளில் சாவாய் என்று கட்டளையிட்டார். **(ஆதியாகமம் 2:17)** ஆனால் தந்திரமான சர்ப்பம் ஏவாளை நோக்கி நீங்கள் சாகவே சாவதில்லை என்று சொன்னது. **ஆதியாகமம் 3:4** ஏவாளோ தேவன் சொன்னதைவிட சர்ப்பத்தின் பேச்சை நம்பி செயற்பட்டாள்.

இவ் வருடத்தில் தேவன் உனக்கு கொடுத்த சபை ஊழியர்களின் எச் சரிப்பின் தேவ வார்த்தை களை கேட்டு நடந்தாயா? அல்லது தந்திரக்காரர்களு டைய பேச்சைக் கேட்டு நடந்தாயா?

**ஆதியாகமம் 3:5 நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.** உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள திறக்கப்படும் என்றது சர்ப்பம். அப் படியே **ஆதியாகமம் 3:7 அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது: அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலை களைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்.** இவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. ஆனால் நடந்தது என்ன? தாங்கள் நிர்வாணிகள் என்று கண்டு தேவ சந்நிதிக்கு விலகி ஒளித்துக் கொண்டார்கள். ஒளித்துக் கொள்ள காரணம்: நிர்வாணத்தை மறைத்துக் கொள்வதற்காக. நிர்வாணம் ஏற்படக் காரணம்: தேவ கட்டளைக்கு கீழ்ப்படியாமல், பார்க்கக் கூடாததைப் பார்த்து, பறிக்கக்கூடா ததை பறித்து, புசிக்கக் கூடாததை புசித்து, கொடுக்கக்கூடாததை கொடுத்ததன் நிமித்தமாக நிர்வாணம் ஏற்பட்டது. இவ் வருடத்தில் பாவம் செய்ததின் நிமித்தம் தேவ மனிதர்களுக்கு உன்னை காண்பிக்காமல் ஒளித்த நாட்கள் உண்டா?

2015ஆம் ஆண்டில் உன்னுடைய பார்வையை எதில் அதிகமாய் செலவிட்டாய்? உனக்கு நல்லது போன்று இருக்கலாம், ஆனால் தேவன் விலக்கின பாவமான காரியங்களை பார்த்துக் கொண்டிருப்பாயானால் தேவ கட்ட ளையை மீறிய ஏவாளின் நிலை போலாகி விடும். **சங்கீதம் 25:15 என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக் கொண்டிருக்கிறது: அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கிவிடுவார்.** தேவன் விலக்கின காரியங்களை மற்றவர்கள் செய்கின்றார்கள் என்பதற்காக நீயும் அவற்றை பற்றி பறித்து உனக்காக வைத்திருக்கின்றாயா? நீ பற்றிப் பறித்து வைக்க வேண்டியவை தேவ கட்டளை.

நீ புசிக்க வேண்டியது தேவனுடைய வார்த்தையாகும். **யோபு 23:12 அவர் உதடுகளின் கற்பனைகளை விட்டு நான் பின்வாங்குவதில்லை: அவருடைய வாயின வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக் கொண்டேன்.** இவ்வாண்டு எதை நீ அதிகமாய் உன் குடும்பத்திற்கு கொடுத்தாய்? நீ கொடுக்க வேண்டியது தேவனும் தேவனுடைய வார்த்தையுமே.

ஏவாளின் செய லும், அவளுடைய முடிவை யும் பார்த்தோம். ஆனால் இன்று உனக்கு தேவன் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கின்றார். உன் வாழ்க்கையையும் சீர்தூக்கிப்பார். நீ நிற்கும் வழி எது? ஏவாளின் வழியா? அல்லது தேவனுடைய வழியா? பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரருடைய வழி யில் நின்றால் நீயும் பாவத் தில்மாண்டுபோவாய். தந்திர மான பேச்சிற்கு நீ இடம் கொடுத்தால் ஏவாள் போன்று ஏமாந்து விடுவாய்.

**புலம்பல் 3:40 நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக் கடவோம்.**

**நீ துரத்தப்பட மாட்டாய்: உனக்காக பர லோகம் காத்திருக்கிறது.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுடைய மூச்சுக் காற்று

O J. கிறேசியன்




அன்பு சகோதரா! சகோதரி! மறுபடியும் நற்செய்தி பகுதிக்கூடாக உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**தானியேல் 5:23 பரலோகத்தின் ஆண்டவருக்கு விரோதமாக உம்மை உயர்த்தினீர்: அவருடைய ஆலயத்தின் பாத்திரங்களை உமக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்: நீரும், உம்முடைய பிரபுக்களும், உம்முடைய மனைவிகளும், உம்முடைய வைப்பாட்டிகளும் அவைகளில் திராட்சரசம் குடித்தீர்கள்: இதுவுமன்றி, தம்முடைய கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவரும், உமது வழிகளுக்கு எல்லாம் அதிகாரியுமாகிய தேவனை நீர் மகிமைப்படுத்தாமல் காணாமலும் கேளாமலும் உணராமலும் இருக்கிற வெள்ளியும் பொன்னும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தீர்.**

எதுவும் அதனதன் இயல்பில் இருக்கும் போது அதன் அருமை யாருக்கும் புரிவதில்லை. ஆனால் அது இல்லாமல் போகும் சந்தர்ப்பம் வரும் போது தான் அப்படி ஒன்று இருப்பதே நமக்கு புரிகின்றது. நாம் நாசியினால் உள்வாங்கி வெளிவிடும் மூச்சுக்காற்றினால் தான் உலகில் வாழ்கின்றோம். ஆனால் மூச்சு விடுவதாக நாம் உணர்வதில்லை. ஆனால் "நமக்கு மூச்சு விடமுடியாதபடி, இளைத்து, களைத்துப் போகும் சந்தர்ப்பங்களில் தான் மூச்சு இருக்கின்றது என்ற உணர்வு வருகின்றது".

**யோபு 32:8 ஆனாலும் மனுஷரில் ஒரு ஆவியுண்டு: சர்வ வல்லவருடைய சுவாசமே அவர்களை உணர்வுள்ளவர்களாக்கும்.** எனவே எல்லா மனிதனுக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும்

கொடுக்கின்ற தேவன் மனுஷனை தம்முடைய ஒரே இரத்தத்தினால் தோன்றப்பண்ணி பூமியில் அவனை குடியிருக்கப்பண்ணினார். சங்கீதம் **104:29 நீர் உமது முகத்தை மறைக்க, திகைக்கும்: நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக் கொள்ள, அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும்.**

எனவே அன்பு சகோதரா! சகோதரி! எம்முடைய வாழ்வின் காலங்கள், அதன் உத்தரவாதம் யாவும் தேவனுடைய கரத்தில் உண்டு. எம்முடைய வாழ்வை ஆரம்பிக்கின்றவரும் அவர் தான்: அதனை முடித்து தன்னுடன் சேர்த்துக் கொள்பவரும் அவர் தான். எம் வாழ்வின் அனைத்து விடயமும் அவருக்குச் சொந்தமானது. எனவே தேவன் கிருபையாக கொடுத்த வாழ்வு - இலவசமாய் கொடுத்தது. மூச்சுக் காற்று இவற்றை மனிதனில் பூமியில் வாழும் காலத்தில் அவருக்காகவும் அவருக்கென்றும் வாழ்கின்ற அதே நேரம் நம் வாழ்வில் ஒவ்வொரு தடவையும் தேவன் நமக்கு தந்த மூச்சிற்காக நன்றி சொல்லுவோம். ஏனெனில் எம் மூச்சு தேவ கரத்தில் உண்டு: மட்டுமல்ல எம்முடைய வழிகளும் அவருடையதே. எம்முடைய மூச்சு எந்த வேளையும் நிற்கலாம். எனவே நாம் ஜீவனோடு இருக்கும் போதே தேவனிற்கு நன்றியாய் வாழ்வோம்.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**

# குறுக்கெழுத்துப் போட்டி - 69

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. அர்னோன் ஆறு - எண் 21:13
04. யோவாப் - 1நாளா 20:1
06. செக்கனியா - எஸ்றா 10:2
09. சன்பல்லாத் (குழம்பியுள்ளது) நெகே 2:19
10. சல்மோன் - ரூத் 4:21

**வலமிருந்து இடமாக**

05. அசுபாள் - 1இராஜா 22:42
07. கிருபைகளை - சங்கீதம் 107:43
08. மேவிபோசேத் - 11சாமு 4:4
11. எர்மோனை - உபாக 3:9

**மேலிருந்து கீழாக**

01. அனனியாவுக்கு - தானியேல் 1:7
02. சீகோன் - நியாயா 11:20
03. மொர்தெகாய் - எஸ்தர் 3:2

**கீழிருந்து மேலாக**

05. அன்னாள் - 1சாமுவே 1:13
09. பரிதானம் - யாத்தி 23:8
11. எசேக்கியா - 11நாளா 32:8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ★ புதிய ஏற்பாட்டுத் திருச்சபை ★

### 02. ஆத்தும கவனிப்பின் இலக்கு அல்லது குறிக்கோள்

ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு குறிக்கோள் உண்டு, திட்டமும் உண்டு. தேவனும் தன் சபையைக் குறித்தும், ஆத்தும கவனிப்பைக் குறித்தும், ஒவ்வொரு மனிதனையும் குறித்தும் திட்டம் வைத்துள்ளார். **எனவே இந்த ஆத்தும கவனிப்பைப் பற்றி வேதம் என்ன கூறுகின்றது எனப் பார்ப்போம்.**

கிறிஸ்தவ வாழ்க்கையின் குறிக்கோள்: இயேசுவின் சாயலுக் கொப்பாகமாறும் படி வளர்வதாகும். **இது வேதாகமத்தில் தெளிவாக கூறப்பட்டுள் ளது. கொலோசெயர் 1:28-29, 11கொரிந்தியர் 3:18, எபேசியர் 4:11, 1யோவான் 3:2-3, எபேசியர் 5:27. ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவை நினைப்பூட்டு பவனாக இருக்க வேண்டும்.** கிறிஸ்தவனின் ஒவ்வொரு அசைவும் கிறிஸ்து வைப் பிரதிபலிக்க வேண்டும். **இது தான் ஆத்தும கவனிப்பின் நோக்கம்.**

### 03. ஆத்தும கவனிப்புக்கான வேதாகம வழிமுறை

வேத வாக்கிய இலக்குகளை அடைய வேதாகம வழிமுறை களையே கையாள வேண்டும். **மனுஷீக வழிமுறைகளால் ஆவிக்குரிய இலக்குகளை அடைய முடியாது.** இவ்வித முயற்சி செய்வது வீணாகும். **எனவே வேதாகம வழிமுறைகள் எவை என ஆராய்ந்து பார்க்கலாம்.**

i. **தேவன் தனது வார்த்தையைக் கொடுத்துள்ளார்.**

**அப்போஸ்தலனாகிய பவுல்: அப்போஸ்தலர் 20:32இல், 11தீமோத்தேயு 3:16-17, 11தீமோத்தேயு 4:1-2** போன்ற வசனங்களில் ஆத்துமாவின் சகல காரியங்களுக்கும் தேவனுடைய வார்த்தையே சரியான மருந்தாகும். என காண்பிக்கின்றார். **வாழ்க்கையின் ஒவ்வொரு கேள்விகளுக்கும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகமத்தில் பதில் உண்டு. தேவையுள்ள ஆத்துமாவுக்கு உதவ நாம் தேவ வார்த்தையைக் கொடுக்க வேண்டும்.

### ii. ஜெபமும் பரிந்து பேசுதலும்:

**அப்போஸ்தலர் 6:4** பவுலின் ஜெபங்களில் இருந்தும் பல காரியங்களை கற்கலாம். **பவுல் நன்றாக பரிந்து பேசுகிறவன்.** இயேசு தம்முடையவர்களுக்காக ஜெபித்தார். **(யோவான் 17, ரோமர் 8:34, எபிரெயர் 7:25-28), கொலோசெயர் 4:12இல்** எப்பாப்பிராவைக் குறித்துச் சொல்வதைப் பாருங்கள். **எம் சபையின் எல்லா அங்கத்தவர்களுக்காகவும் பரிந்து பேச நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.** ஜெபிக்கும் போது ஒரு குறிக்கோளுடன் ஒரு திட்டமான நோக்கத்துடன் பரிந்து பேசுதல்கள் இருக்க வேண்டும். **கொலோசெயர் 4:12. நாம் நமது மேய்ப்பருக்காக ஜெபிக்க வேண்டும். தேவன் அவருக்கு ஒப்புவித்த பணியை நிறைவு செய்ய தேவையானவற்றைக் கொடுக்கும்படி.** இப்படி செய்வதன் மூலம் நாம் அவருக்கு உதவி செய்கின்றோம். **எமது முழு கிறிஸ்தவ வாழ்க்கையும் ஒரு ஜெப வாழ்க்கையாகவே இருக்க வேண்டும்.**

நாம் ஒருவருக்கொருவர் சேவை செய்ய தேவன் கொடுத்த ஒரு திறமையான வழிமுறை இதுவாகும். **நாம் ஒருவரை ஒருவர் நேசிக்கின்றோம் என்பதற்கும் இதுவே ஒரு நிச்சயமான அடையாளமாகும்.** நாம் முதலாவது மக்களின் தேவைகள், பிரச்சனைகள், துயரங்கள் போன்றவற்றைக் கேட்டு அறிய வேண்டும். **பின்பு இதைக் குறித்து தேவனுடைய வார்த்தை என்ன கூறுகின்றதென அறிய வேண்டும்.** இதன் பின்பு இரக்கத்தையும், சகாயத்தையும் பெறும்படிக்கு தைரியமாக கிருபாசனம் அண்டை செல்லலாம். **எபிரெயர் 4:16, பிலிப்பியர் 4:19.**

### iii. கிறிஸ்துவுக்குள் இருக்கும் அளவற்ற ஐஸ்வரியம் – எபேசியர் 3:8

மனித குலத்தின் தேவைக்கு கிறிஸ்துவின் சிலுவை சரியான பதிலாக இருக்கின்றது. **இரட்சிப்புக்கு தேவன் உண்டுபண்ணிய இந்த தெய்வீக ஊற்றை எம் சக மனிதர் காணும்படி நாம் உதவி செய்ய வேண்டும்.** *Salvation* என்றதன் கிரேக்க பதம்: *Soteris* - இதற்கு விடுதலை என்பது மாத்திரம் அர்த்தமல்ல. **காப்பாற்று, உதவி, ஆரோக்கியம்** என்ற அர்த்தங்களும் உண்டு. தேவனின் இரட்சிப்பு எனும் போது வியாதிப்பட்ட ஆத்துமாவுக்கு ஆரோக்கியத்தையும் தேவனோடு இசைவையும் உண்டுபண்ணுவது ஆகும்.

### iv. ஆத்துமாவின் வியாதியை நீக்குவதற்கு பாடலும் இசையும் மிகவும் உதவுகிறது.

அதாவது ஆவிக்குரியதும், ஆவியின் ஏவுதலினால் உண்டாகும் பாடலும் இசையுமாகும். பவுலும் சீலாவும் சுவிசேஷத்தின் நிமித்தம் சிறை வைக்கப்பட்ட போது என்ன செய்தார்கள். **அப்போஸ்தலர் 16:25 நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துதிததுப்பாடினார்கள்: காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந் தார்கள்.** ஆரோக்கியமான ஆத்துமாவுக்கு இது அடையாளம். **ஆத்துமாவை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கும் இது ஓர் அற்புதமான வழியாகும்.** இந்த தேவனுடைய ஊழியக்காரர்கள் தங்கள் ஆத்துமாவை பாடுகளுக்கூடாகவும், உபத்திரவத்திற்கூடாகவும் எப்படி காக்க வேண்டும் என்ற சரியான வழியை அறிந்திருந்தார்கள்.

பாடல், இவை அவசியம் ஆனால் எண்ண வேண்டியதற்கு மிஞ்சி உங்களை எண்ண வேண்டாம். **கொலோசெயர் 3:16 கிறிஸ்துவின் வசனம் உங்களுக் குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக: சங்கீதங்களி னாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி:** (தேவனிடம் கிருபை பெற்றவர்களுக்கு சந்தர்ப்பமளிக்க வேண்டும்). **மாட்டீன் லூதர் சோதிக்கப்படும் போது / தொய்ந்து போகும் போது கூறுவது:** நாம் கர்த்தருக்கு கீர்த்தனைகள் பாடி பிசாசை வருத்துவோம். **இதன் மூலம் பிசாசு ஓடுவதை உணர்ந்திருக்கின்றோம்.** அபிஷேகம் நிறைந்த பாடலும் இசையும் நமக்குப் பெரும் உதவி. **இதன் மூலம் கர்த்தருக்குள் ஒருவரை பெலப்படுத்தி ஆறுதல்படுத்தலாம்.**

கர்த்தர் உங்களுக்கு பாடும், இசை மீட்கும் தாலந்தைக் கொடுத் திருந்தால் அதைக் கர்த்தருக்கு அர்ப்பணியுங்கள். **இதன் மூலம் ஆத்துமாக் களுக்கு நீங்கள் செய்யும் சேவையில் அவர் உங்களுக்கு ஆசீர்வாதத்தைக் கூட்டுவார்.** ஆத்தும கவனிப்புக்கான வேறு வழிமுறைகளும் அனேகம் உண்டு. எம் இருதயம் தேவ அன்பினாலும், ஞானத்தினாலும் நிறைந்து இருக்குமானால் சரியான வழிமுறையைக் கையாள தேவன் வழிநடத்துவார். **எல்லாக் காரியங்களிலும் நம்மை வழிநடத்தும்படி தேவன் தன் பரிசுத்த ஆவியானவரைக் கொடுத்திருக்கிறார்.** இந்தப் பணிக்கு தம்மை தயார்படுத்த தேவன் ஆவலுள்ளவ ராகவும், வல்லமையுள்ளவராகவும் இருக்கிறார். எபேசியர் 4:7, 11-13. “நம்மில் அவனவனுக்கு” என்பதை கருத்திற் கொள்ள வேண்டும். இதன் மூலம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கட்ட நம்மில் அவனவனுக்கு தேவையானதை தேவன் கொடுத்துள்ளார்.

**ஆகவே தேவன் கொடுத்துள்ளதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.** அற்பமாக எண்ணக்கூடாது, எண்ண வேண்டியதற்கு மிஞ்சியும் எண்ணக்கூடாது. **எப்படி ஆத்தும ஆதயம் செய்ய ஒவ்வொரு கிறிஸ்தவனையும் இயேசு அழைத்தாரோ** – அதே படி ஆத்துமாக்களையும் கவனிக்கும்படி தேவன் எம்மிடம் எதிர்பார்க் கின்றார். **விசுவாசிகளாகிய நாம் பரிசுத்த ஆசாரிய கூட்டமாக இருக்கின்றோம்.** இந்தப் பாக்கியத்தைக் குறித்து நாம் விழிப்படைவோமானால் நம் சபைகள் செழிக்கும். **இச் சந்தர்ப்பத்தில் அப்போஸ்தலனாகிய பேதுருவின் ஆலோசனையைப் பார்ப்பது நல்லது: 1பேதுரு 4:10 அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்.** சரியான வேதாகம வழிமுறையில் ஆத்துமாக்களை கவனிக்கத் தெரிந்தவர்களே திறமையான மக்கள்.

**(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)**

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி - 70

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | X |
| | X | X | X | | | | | 02 |
| | | X | | | 03 | X | 04 | X |
| | 05 | | | | X | | | |
| | | X | | | | 06 | | |
| | 07 | | | | X | | | |
| | 08 | | 09 | X | X | 10 | X | |
| X | 11 | | | | | X | X | |
| X | | | | | | | | 12 |

குறிப்பு:- 12வயதுக்கு
மேற்பட்டவர்களை தவிர்த்து
குறுக்கெழுத்துப் போட்டியை
செய்து அனுப்புமாறு
கேட்டுக்கொள்கிறோம்.
- நன்றி -



## இடமிருந்து வலமாக

01. முற்காலத்தில் தெபீருக்கு இவ்வாறு பேர்
05. நம்முடைய ........ வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது
07. எமோரியர் இதை "சேனீர்" என்கிறார்கள்
11. "உன் புயத்தையும் உன் பிதாவின் வீட்டாரின் புயத்தையும் நான் தறித்துப் போடும் நாட்கள் வரும்" என்று இவனிடம் கூறப்பட்டது.

## வலமிருந்து இடமாக

02. இவன் தன் பள்ளி அறையிலே படுத்திருக்கும் போது கொல்லப்பட்டான்
03. மொர்தெகாய் தன்னை நமஸ்கரியாததைக் கண்டு, மூர்க்கம் அடைந்தவன்
06. இஸ்ரவேலர் கானான் தேசத்துக்குப் போகையில் இதன் எல்லைக்குள் பிரவேசிக்கவில்லை
09. செபுலோன் கோத்திரத்திலிருந்து கானானை சுற்றிப்பார்க்க அனுப்பப்பட்டவன்
12. கர்த்தர் அந்நியன் மேல் அன்பு வைத்து அவனுக்கு ........ கொடுக்கிறார்

## மேலிருந்து கீழாக

01. இந்தப் பூர்வ நதியில் சிசெரா தோற்கடிக்கப்பட்டான்
04. யூதாவும் எருசலேமும் சிறைப்பிடிக்கப்பட்ட போது இவன் சிறைப்பட்டுப்போனான்

## கீழிருந்து மேலாக

08. மோசேயின் இரண்டாம் குமாரன் (குழம்பியுள்ளது)
10. கேதுருமரங்களை இவன் காட்டத்திமரங்களைப் போல அதிகமாக்கினான்
12. அகசியாவின் தாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தோஷம் இல்லை: யார் காரணம்?

## வேதப்பகுதி: நீதிமொழிகள் 15:16-23

திருமண நிகழ்ச்சிக்காக பொன்குமார், அம்மா, அப்பா, தங்கையுடன் போய்க் கொண்டிருந்தான். செல்லும் வழியில் பொம்மைக் கடை ஒன்றில் இருந்த ரிமோட் காரை வாங்கித் தரக்கேட்டான். பின்னர் வாங்கலாம் என்றார் அவனுடைய தந்தை. அவனோ இப்பொழுதே வேண்டும் என்று அடம்பிடித்தான். திருமண நிகழ்ச்சியிலும் அழுது கொண்டேயிருந்தான். எனவே அப்பா, அம்மா, தங்கை யாரும் திருமண நிகழ்ச்சியில் உற்சாகமாக இருக்க முடிய விலலை. எல்லாரும் சோகமாகவே வீடு திரும்பினர்.



வீட்டிற்கு வந்த பிறகு பொன்குமார் தன் தவறை உணர்ந்தான். திருமண விருந்தில் யாரும் சந்தோஷமாயிருக்க முடியாமைக்கு நான் தான் காரணம் என உணர்ந்து மன்னிப்புக் கேட்டான். நீ எல்லாரையும் சந்தோஷப்படுத்த வேண்டும். உன்னால் யாரும் சஞ்சலப்படக்கூடாது என்று முடிவு செய்! அந்த முடிவில் உறுதியாயிருக்க ஜெபம் செய்.

**சிந்தனைக்கு:- நீ சந்தோஷமாயிருப்பதற்காக பிறரை துக்கப்படுத்தாதே: நீ துக்கமாயிருந்து பிறரின் சந்தோஷத்தை கெடுக்காதே.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! — ஜீலை 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஜான் ஸ்கடர்



### அற்பமான ஆரம்பம்

"ஒரு சுவிசேஷ துண்டுப்பிரதி, ஒரு மாபெரும் எழுப்புதலை உண்டாக்கும்" என்று நீங்கள் நினைக்கிறீர்களா? உலகத்தின் பல பாகங்களிலும், பலர் இரட்சிக்கப்பட்டதற்குக் காரணம், இச் சுவிசேஷ துண்டுப்பிரதிகளே.

ஒரு நாள்: ஜான் ஸ்கடர் ஒருவரைப் பார்ப்பதற்காக காத்திருந்தார். அப்பொழுது தான் அவர் கண்களில்பட்டது: அந்த சுவிசேஷ காகிதம். "உலகத்தின் மனந்திரும்புதல்" கண்டதும் எடுத்தார், படித்தார், மனதைக் கொடுத்தார். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். அதுவே ஒரு மகத்தான எழுப்புதல் இந்திய தேசத்தில் உருவாகக் காரணமானது.

1819ஆம் ஆண்டு, இலங்கை சென்ற இவர் முதல் மருத்துவ மிஷனெரியாக தன் பணியை ஆரம்பித்தார். பின்னர் அங்கிருந்து இந்தியாவிற்குப் பயணமானார். சுமார் 36 வருடங்கள் இந்தியாவிலேயே தன் பணிகளைச் செய்தார். இந்தியாவில் மாபெரும் மருத்துவப் புரட்சி இவரால் உருவானது. தனது 7 குமாரர்களையும், 2குமாரத்திகளையும் மிஷனெரிப் பணிக்கு அர்ப்பணித்தார். இவர் குடும்பத்திலிருந்த 43 நபர்களும், கிறிஸ்தவ பணிக்காக அர்ப்பணிக்கப்பட்டவர்களே. இவர்களது வாழ்வால் சுமார் 1100 வருடங்கள் நடைபெறும் பணி சிறப்புடன் நடைபெற்று இன்றும் தொடர்கின்றது.

ஜான் ஸ்கடரின் பேரக்குழந்தையே டாக்டர் ஐடா ஸ்கடர் என்பவராவார். இவர் மூலம் சி.எம்.சி.மருத்துவமனை வேலூரில் உருவாக்கப்பட்டது. இது சரித்திரத்திலேயே மிகப் பெரிய சான்று ஆகும். ஜான் ஸ்கடரின் அர்ப்பணிப்பும், கிறிஸ்துவின் மேல் உள்ள பற்றும், இந்திய சமுதாயத்திலுள்ள நலிந்தவர்களின் வாழ்வை தழைக்கச் செய்தது. சரீர சுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்லாமல், ஆத்மீக சுகத்தையும் அனுதினம் பெறச் செய்தார். மக்களின் ஆன்மீக வாழ்வு வளர்ந்தது. சமுதாயத்தின் சீர்கேடுகள் மறைந்தது. ஏழை எளியவர்களின் நண்பராக, கிறிஸ்துவின் தொண்டராக தன் பணியை நிறைவு செய்தார் ஜான் ஸ்கடர்.

ஒரு சுவிசேஷ துண்டுப்பிரதியானது, பல்லாயிரக்கணக்கானோர் இரட்சிப்பின் பாதையில் கடந்து வருவதற்குக் காரணமாக இருந்ததென்றால், நீங்களும் இதைப் போன்ற பணியை செய்யலாமல்லவா?

**அன்பரே! வேதாகமப் பிரதிகளை வழங்குவதில் உங்கள் பங்கு என்ன?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: மற்றவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் காரியங்களை செய்கிறவன், எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருப்பான்.**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" செப்டெம்பர் 2*



## கர்த்தார் சிங்

## எப்படியாகிலும்...

பாட்டியாலா என்ற கிராமத்தில் மாபெரும் செல்வந்தரான சீக்கிய பெற்றோருக்கு மகனாக பிறந்தார் கர்த்தார் சிங். இவரது தந்தை தன்னுடைய குமாரன் சிறந்தவனாக வளரவேண்டும் என்று விரும்பியதால் சகல விதமான பயிற்சிகளையும் கற்றுக் கொடுத்தார்.

சிறுவயதிலேயே கிறிஸ்தவ மதக் கோட்பாடுகளில் ஆர்வம் காட்டிய இவர் வேதாகமத்தின் சத்தியங்களில் தன் மனதை பறிகொடுத்தார். எந்த அளவுக்கு இயேசுவின் வார்த்தைகளை நேசித்தாரோ, அந்த அளவுக்கு அவரது பாவ வாழ்வு அவரைவிட்டு உருண்டோடியது. இறுதியில் தன்னை இயேசுவுக்கு முற்றிலுமாக அர்ப்பணித்தார்.

கர்த்தார்சிங் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால், தன்னுடைய வீட்டிலிருந்து வெறுமையாக துரத்தப்பட்டார். ஆனால் இவர் பாட்டியாலாவிலுள்ள கிராமங்களிலும், பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். பஞ்சாபில் அநேக இடங்களில் சுவிசேஷத்தை அறிவித்த இவர், உயர்ந்த மலைகளைத் தாண்டி திபெத் நாட்டிற்குப் பயணமானார். அங்கு புத்த பிட்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் போதகத்தை எதிர்த்தனர். ஆயினும் கிறிஸ்துவின் அன்பை தன் வாழ்க்கையில் செயல்படுத்திக் காட்டி சிலரை கிறிஸ்துவண்டை வரச் செய்தார்.

எப்படியாயினும் அம் மக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்துவிட வேண்டும் என்று தன் அழைப்பில் உறுதியாக காணப்பட்ட இவர், தெருத்தெருவாக சென்று சுவிசேஷத்தை அறிவித்தார். அரசாங்கத்தின் உத்தரவின்றி உள்ளே வந்துள்ளான் என்று இவரை குற்றம் சாட்டி சிங்காமின் தலைவரிடத்தில் கொண்டு சென்றார்கள். தலைவன் இவருக்கு மரண தண்டனை விதித்த போதிலும், தன் விசுவாசத்தை மறுதலிக்காமல், அம் மக்களுக்கு கிறிஸ்துவின் செய்தியை எடுத்துரைக்க ஆரம்பித்தார். இதனால் இவரை ஓர் ஈர எருமைத் தோலில் வைத்து தைத்து வெயிலில் போட்டனர். வெயில் ஏற, ஏற இவர் எலும்புகள் உடைய ஆரம்பித்தன. சுற்றி நின்றோர் பரிகாசம் செய்ய, இவரோ இயேசுவே உண்மையான தெய்வம் என்று அவர்களுக்கு அறிவித்துக் கொண்டே இருந்தார். ஒரு முறையாகிலும் கதறி அழாமல் அந்த கொடிய வேதனையை அமைதியாக சகித்து, ஆண்டவரின் கரத்தில் தன் ஜீவனைக் கொடுத்தார். சாது சுந்தர்சிங் இவர் வாழ்வால் மேலும் உற்சாகம் பெற்றார்.

**அன்பரே! ஆண்டவர் அனுப்பும் இடத்திற்கு நீங்கள் போகத் தயாரா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: உண்மையாகவே என்னால் முடிந்ததைச் செய்த போதிலும், எல்லாவற்றையும் செய்ய என்னால் முடியவில்லை — கர்த்தூர் சிங்.**

*நன்றி: மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" செப்டெம்பர் 09*

## குறுக்கெழுத்துப் போட்டி - 69

## சரியான விடை எழுதியவர்கள்

01. செ.கயா - பாண்டவெட்டை
02. சி.கிருஸ்ணஜெயந்தி - பாண்டவெட்டை
03. சி.ஜெறோம் - பாண்டவெட்டை
04. சி.ஜெயந்தினி - பாண்டவெட்டை
05. அ.தயாழினி - நவக்கிரி
06. க.கிருஸ்ணரூபா - நவக்கிரி
07. ரி.பிரியங்கா - நவக்கிரி
08. செ.ரூத் - நவக்கிரி

## வினா விடை - 71

01. ஆர். கொன்சி - திருநெல்வேலி
02. செ.ரூத் - நவக்கிரி
03. ரி.பிரியங்கா - நவக்கிரி
04. க.கிருஸ்ணரூபா - நவக்கிரி
05. அ.தயாளினி - நவக்கிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடை – 71

## சரியான பதில்கள்

01. லிவியாதான் – யோபு 41:18, 1
02. வேசித்தனம் – நீதிமொழிகள் 23:27-28
03. பரிசேயர் – யோவான் 8:13, 41
04. வேசிப்பிள்ளை – உபாகமம் 23:2
05. லேகியோன் பிசாசு துரத்தப்படும்முன் பன்றி கூட்டத்திற்குள் போக தனக்கு உத்தரவு வேண்டிக் கொண்டது – மத்தேயு 8:31
06. சிமியோன், லேவி – ஆதியாகமம் 34:30-31
07. நாகமாத்தியனாகிய சோப்பார் – யோபு 11:1-2
08. யூதா கோத்திரத்தார் – ஆமோஸ் 2:4-6
09. நீதிமான் – நீதிமொழிகள் 14:32
10. நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் – யாக்கோபு 3:12

# வினா விடை – 72

*01.* எல்லா மனுபுத்திரரிலும் மகா சவுந்தரியமுள்ளவன் யார்?

*02.* மகா புத்திசாலியும் ரூபவதியுமாயிருந்த பெண் யார்?

*03.* யார் ஜெபிக்கையில் வானம் திறக்கப்பட்டது?

*04.* திவ்ய வாசகனாயிருந்தவன் யார்?

*05.* மனக்கிலேசத்தோடு ஜெபித்த ஸ்திரீ யார்?

*06.* வெகு அழகாயிருந்த ஒரு பெண் யார்?

*07.* மனத்தாழ்மையோடு ஜெபித்த புருசன் யார்?

*08.* தன் மனைவிக்காக ஜெபித்தவன் யார்?

*09.* பலத்த சத்தத்தோடு ஜெபம்பண்ணினவர் யார்?

*10.* எந்த ராஜாவின் முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போதகர் வே.மகாராஜா

**"நிரூபிக்கக் கூடியதாக பாவம் செய்தாலும் அல்லது எங்களுடைய பாவம் நிரூபிக்க முடியாமல் இருந்தாலும் பாவம் என்றால் பாவம் தான்".**

பயிர்களுக்கு அடிக்கும் விஷ தன்மையுடைய கிருமி நாசினி அடைக்கப்பட்ட போத்தலில் அதன் பெயர் எழுதப்பட்டிருக்கும். எங்களுக்கு பார்க்கிற போதே தெரியும் அது விஷம் நிறைந்தது என்று. ஆனால் இது இனிமையான சுவைக்கும் பானம் என்று எழுத முடியாது. அப்படி இருந்தாலும் உள்ளே இருப்பது விஷம் விஷம் தான்.

தேவன எப்பொழுதுமே மனிதனுடைய மறைக்கப்பட்ட வாழ்வின் பகுதியில் கருத்தாகவுள்ளார். ஆண்டவரின் வார்த்தையே கூறுகின்றது: மனிதன் முகத்தைப் பார்க்கிறான், தேவனோ இருதயத்தைப் பார்க்கிறாரென்று. கிறிஸ்துவின் மூலம் உருவாக்கப்பட்ட ஆவிக்குரிய பெரிய மறுமலர்ச்சியில் மறைக்கப்பட்ட மனித வாழ்வின் நிலைகள் மிக அதிகமான உற்று நோக்குதலுக்குடையதாகும். வெளிப்படையான வாழ்வின் பரிசுத்தமும் மறைவான வாழ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்தமும் ஒருங்கே தேவனால் நோக்கப்படுகிறது. உள்ளான தூய்மையில் தேவன் அதிக அக்கறையாகவுள்ளார்.

வெளிப்படையான வாழ்வில் தங்களை சிறந்தவர்களாக காண்பிக்கும் அனேகர் தங்களுடைய உள்ளான, அசிங்கமான நிலையை சீர் செய்யாது இருப்பது வேதனைக்குரியது.

தேவனுடைய கட்டளைகளை உள்ளாக கிரியை செய்ய விட்டு, உள்ளான வாழ்வில் தூய்மையடைந்து அதன்பலன் வெளியாக உண்மையாக காணப்படுவது தான் சிறந்த மாற்றம்.

**பிலிப்பியர் 3:6b நியாயப் பிரமாணத்திற்குரிய நீதியின் படி குற்றஞ்சாட்டப்படாதவன்.** பிரமாணத்தின்படி அல்லது எழுத்தின்படி அந்நாட்களில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட மோசேயின் சட்டதிட்டங்களின் படி பவுலைப் பார்க்கிற போது நியாயப் பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றம் சாட்டப்படாதவன் என்று பவுலே அறிக்கையிடுகிறான். அப்படியென்றால்: **"எழுத்தின் படி மற்றவர்கள் பார்க்கிற போது பவுலிடத்தில் ஒரு சிறிய பாவத்தையோ, குற்றத்தையோ கண்டுபிடிக்க முடியாத நிலையில் பழைய ஏற்பாட்டுக்குரிய பக்தி வைராக்கியத்தில் வாழ்ந்தவன்".** அவன நான் இஸ்ரவேலன், யூதன், பிரமாணத்தின்படி குற்றம் சொல்லப்பட முடியாதவன் என்று தன்னைக் குறித்து சொன்னான். அவன் இரட்சிக்கப்பட்டு தேவனை அறிந்து கிறிஸ்துவுக்குள் வந்து ஆவிக்குரியவனாக மாற்றப்பட்டு ஆவிக்குரிய ரீதியிலே தேவனைத் தொழுது கொள்ளத் தொடங்கிய போது **"பிரதான பாவி நான்"** என்று ஒரு பெரிய அறிக்கை செய்தான. **1தீமோத்தேயு 1:15 பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகாிப்புக்கும் பாத்திரமுமானது: அவர்களில் பிரதான பாவி நான்.** இதற்கு முன்பு அவனுடைய எண்ணம் எழுத்தின்படி, யாரும் நிரூபிக்கக் கூடிய விதத்தில் என்னிடத்தில் பாவம் இல்லை என்று இருந்தது. ஆனால் உண்மை கிறிஸ்தவனாக மாறிய போது **"நான் பாவி"** என்று அவன் கண்டுகொண்டான்.

"நிரூபிக்கப்பட முடியா விட்டாலும் நாங்கள் செய்த பாவம் பாவம் தான்". எழுத்தின் படி பாவி என்று நிரூபிக்கப்படாமல் ஆவிக்குரிய ரீதியிலே அநேகர் பாவத்தோடு இருக்கிறோம். பாவம் செய்துவிட்டீர்கள்என்று சொன்னால் உடனே இல்லை என்று நாங்கள் மறுத்துவிடுவோம். ஆனால் நான் பாவம் செய்துவிட்டேன் என்று எங்களுடைய உள்ளான மனுஷனில் தெரியும். பவுல் அதைப் பகிரங்கமாக, வெளியரங்கமாக அறிவித்தார்.

இந்த கால கட்டங்களிலே நாங்கள் செய்ய வேண்டிய முக்கியமான காரியம் "பூரண ஆவிக்குரிய பரிசுத்தத்திற்குள்ளே, தூய்மைக்குள்ளே வர வேண்டும்." **நீதிமொழிகள் 21:2 மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும்: கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பார்க்கிறார்.** பாவம் செய்தும் அது எங்களுடைய இருதயத்திலே சரி போல இருக்கும். கர்த்தரோ எல்லாவற்றையும் நிறுத்துப் பார்க்கிறார். நாங்கள் ஆவிக்குரிய யுகத்திலே வாழ்கிறோம். ஆண்டவர் எல்லாவற்றிலும் ஆவிக்குரிய ரீதியிலே பார்க்கிறார். எங்களுடைய பெயரே: **"ஆவிக்குரிய விசுவாசிகள், கிறிஸ்தவர்கள், பெந்தகோஸ்தே விசுவாசிகள். நாங்கள் சிலவற்றை செய்யாவிட்டாலும் அதை சிந்தித்து விட்டால் பாவம் செய்து விட்டோம்".**

உதாரணமாகஒருபெண்ணை இச்சையோடு பார்த்தால் விபச்சாரம் செய்தாயிற்று என்று இயேசு சொல்லியிருக்கிறார். அப்படியென்றால் இது ஆவிக்குரிய காலம். ஆண்டவர் எங்களை ஆவிக்குரிய ரீதியிலே பார்க்கிறார். ஒரு சகோதரனை பகைத்தால் கொலைபாதகம் என்று வேதாகமத்திலே புதிய ஏற்பாட்டில் சொல்லப்படுகிறது. நாங்கள் செய்கிற ஒவ்வொரு காரியங்களையும் ஆவிக்குரிய ரீதியிலே அணுக வேண்டும்.

சில தேசங்களில் சரியான நேர்மையான சட்டங்கள் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் சில தேசங்களில் எழுதப்பட்டிருக்கிற சட்டங்கள் தேவனுடைய வார்த்தைக்கு எதிராக இருக்கிறது. உதாரணமாக சில தேசங்களில் ஆணும் ஆணும் திருமணம் செய்ய முடியும் என்று சட்டம் இருக்கிறது. எனவே அந்த தேசத்தில் இருக்கிறவர் அந்தப் பாவத்தை செய்தாலும் அது பாவம் இல்லை என்று நினைக்கக் கூடாது. ஏனென்றால் அந்த தேசமே அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இது (சட்டத்தின்படி) எழுத்தின்படி நிரூபிக்கப்பட முடியாத பாவம். ஆவிக்குரியவர்களாக ஒன்றை சிந்திக்க வேண்டும். நாங்கள் எழுத்தின்படி பாவி இல்லை என்பதை எந்த வழியிலும் நிரூபித்தாலும் அது தேவனுடைய வார்த்தையின்படி பாவம் என்றால் பாவம் தான். எனவே நாங்கள் எல்லா காரியத்தையும் உணர்ந்து தேவனுக்குள்ளே ஒரு பிரியமான வாழ்க்கைக்குள்ளே அழைக்கப்பட்டிருக்கிறோம். **ரோமர் 7:24 நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?** அவனுக்குள்ளே ஒரு போராட்டம். பாவத்தால் கட்டப்பட்டு விடுவிக்க முடியாத ஒரு நிலை. ஆனால் **ரோமர் 8:2 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.** என்று சொல்லுகிறார்.

**"தெரியாமல் இருப்பது பாவம் இல்லை. தெரிந்தது தான் பாவம் என்று பலர் நினைப்பார்கள். ஆனால் இது தவறு".** பவுலுடைய வாழ்க்கையில் இருந்து ஒன்றைக் கற்றுக் கொள்ள வேண்டும். அவன் தனக்குள் இருந்த வேதனையைத் தான் **ரோமர் 8:2** இல் சொல்லியிருக்கிறார். எங்களிடத்தில் மறைந்திருக்கிற பாவத்திற்கெல்லாம் ஒரு இடத்தில் மீட்பு உண்டு. எப்படியென்றால் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பாவத்தை அறிக்கை செய்து ஒரு தூய்மையான ஜீவியம் ஜீவிக்கிற போது ஆண்டவர் தந்த பாவ மன்னிப்பின் சுயாதீனத்தை அனுபவிக்க முடியும். **"நாங்கள் மற்றவர்களாலே பிடிபட முதலே நான் பாவி என்று அறிக்கையிட வேண்டும".** குற்றம் சாட்டப்பட்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தங்களுக்கு ஒரு சட்டத்தரணியை வைப்பார்கள். அவர்கள் வாதாடுவார்கள். கிறிஸ்தவர்கள் செய்தால் செய்தது என்றும்: செய்யவில்லை என்றால் செய்யவில்லை என்றும் சொல்லுங்கள். அதுதான் உண்மையான ஆவிக்குரிய கிறிஸ்தவம்.

## இயேசு இருதயத்தைப் பார்த்தார்.

**லூக்கா 18:10-12 (10.) இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்: ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக் காரன். 11. பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக் காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக் கிறேன். 12. வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்: என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக் குள்ளே ஜெபம்பண்ணினான்.** பரிசேயனுடைய வார்த்தைக்குள் மறைந்திருந்தது என்னவென்றால் நீர் தந்த பிரமாணத்தின்படி செய்கிறேன், வாழ்கிறேன். நான் எழுத்தின் படி குற்றம் சாட்டப்படக்கூடியவன் இல்லை என்று பரிசேயன் தன்னுடைய நியாயத்தை தேவனுடைய சமூகத்திலே சொன்னான். **ஆனால் ஆயக் காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு: தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்றான.** அதற்கு இயேசு சொன்னது **லூக்கா 18:14[a] அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக் குச் சொல்லுகிறேன்** என்றார். "அந்தப் பரிசேயனை எழுத்தின்படி பார்க்கிற போது அவனிடத்தில் பாவம் இல்லை: கிறிஸ்து பார்த்த போது அவனிடத்தில் பாவம் இருந்தது". ஆனால் ஆயக்காரன் மன்னிப்புக் கேட்டு பரிசுத்தவானாக மாறினான். எழுத்தின்படி, பிரமாணத்தின்படி பார்க்கிற போது பரிசேயன் பாவி என்று நிரூபிக்கப்பட முடியாது. ஏனென்றால் அவன் அதன்படி வாழ்கிறான். ஆனால் "ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாக வருகிற போது மற்றவர்கள் காண்கிற பகுதி தான் கிறிஸ்தவம் அல்ல. மாறாக மற்றவர்கள் காண்கிற பகுதிகளும், மற்றவர்கள் காணாத பகுதிகளும் தான் கிறிஸ்தவத்திற்குள் இணைந்திருக்கிறது".

வெளியிலே தெரிகிற பகுதிகளும், மறைவான பகுதிகளும் தேவனுக்கு நேராக திறக்க வேண்டும். அந்த மனிதன் நிமிர்ந்து பார்க்க முடியாமல் மார்பிலே அடித்து, பாவியாகிய என்மேல் கிருபையாக இரும் என்றான். **"தான் பாவி என்று சொல்லியாரெல்லாம் இயேசு கிறிஸ்துவினிடத்தில் வந்தார்களோ அவர்களுக்கு ஒரு விஷேச மரியாதையைக் கர்த்தர் கொடுத்தார். யாரெல்லாம் தாங்கள் பாவி என்று ஏற்றுக் கொண்டார்களோ. அவர்களுக்கெல்லாம் விஷேச கனத்தைக் கர்த்தர் கொடுத்தார்".**

ஆண்டவர் விருந்தில் இருக்கும் போது ஆண்டவருடைய பாதத்தைப் பிடித்து ஒரு ஸ்திரீ அழுகிறாள். அவளுடைய கண்ணீரால் ஆண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரின் காலை நனைத்து தலைமுடியால் அதை துடைக்கிறாள். அந்தப் பாவிக்கு தன் கால்களைத் தொடுவதற்கு ஆண்டவர் இடம் கொடுத்தார். அவள் எழுத்தின்படி நிருபிக்கப்பட்ட பாவி. ஆனால் இயேசுவிடம வந்த போது ஒரு விடுதலையைப் பெற்றாள். நிருபிக்கப்படாத பாவிகள் அநேகர் இருக்கிறார்கள் என்று ஆண்டவருக்குத் தெரியும். நீங்கள் பாவம் செய்திருக்கலாம். அதை மறைக்காதீர்கள். என்ன பெயர் கிடைத்தாலும் அந்தப் பாவத்தை அறிக்கை செய்யுங்கள். நாங்கள் பாவத்தை மறைப்பதால் பரிசுத்தவான் ஆகப் போவதில்லை. அந்தப் பாவத்தை அறிக்கை செய்வதால் தான் பரிசுத்தவான்களாவோம்.

**இவள் கண்டுபிடிக்கப்பட்ட பாவி: நீங்கள் கண்டு பிடிக்கப்படாத பாவிகள்.**

"ஒரு காரியத்தை நிருபிக்க முடியாமல் இருக்கலாம். அதை யாரும் காண முடியாது என்பதற்காக நாம் அப்படியே இருக்க முடியாது. உங்களுடைய வாலிப காலங்களில், நீங்கள் படிக்கிற நாட்களில் நடந்து கொண்ட விதங்கள், பேசிய வார்த்தைகள் நிருபிக்கப்படாமலே போயிருக்கலாம். ஆனால் உங்களுக்குத் தெரிய வேண்டும் நான் ஆவிக்குரிய வன் என்றால் நிருபிக்கப்படாத பாவியாக இருக்கிறேன்".

யோவான் 8ம் அதிகாரத்திலே விபச்சாரத்தில் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்ட பெண்ணை இயேசுவிடம் கொண்டு வந்து இவளை கையும் மெய்யுமாக பிடித்தோம். மோசே எங்களுக்குத் தந்த பிரமாணத்தின்படி இப்படிப்பட்டவர்கள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு இயேசு. உங்களில் பாவம் செய்யாதவன் முதலிலே கல்லை எறியட்டும் என்று சொன்னார். ஆண்டவர் அங்கே எதனைக் காண்பித்தார் என்றால்: "மற்றவர்கள் அறியாதபடி பாவம் செய்தால் அது பாவம் இல்லை என்று இல்லை. இவள் கண்டு பிடிக்கப்பட்ட பாவி. நீங்கள் கண்டு பிடிக்கப்படாத பாவிகள்" (இவள் பிடிபட்ட திருடி: அவர்கள் பிடிபடாத திருடர்கள்). அது தான் உங்களில் பாவம் செய்யாதவன் முதலில் கல்லெறியட்டும் என்று சொன்னார். பிரமாணத்தின் படி, எழுத்தின்படி, மோசே கொடுத்த கற்பனையின்படி பார்க்கிற போது இவள் நிச்சயமாக தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் இயேசுவுக்குத் தெரியும் இவள் பிரமாணத்தின்படி நிருபிக்கப்பட்டாயிற்று. அதேபோல நீங்கள் நிருபிக்கப்படாமல் பாவம் செய்கிறீர்கள் என்று இயேசு சொன்னார். "யாராவது நீங்கள் நிருபிக்கப்பட முடியாத பாவத்தில் சிக்கியிருந்தால் இயேசு தண்டனை தரும் முன் தயவு செய்து அறிக்கையிட வேண்டும், வெளியே வர வேண்டும். தெரிந்தால் தான் பாவம். தெரியாவிட்டால் பாவம் இல்லை என்று நினைக்கக் கூடாது. பாவம் நன்றாக ஒளித்து மறைந்து கொள்ளும்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவத்தை பூமிக்கு கொண்டு வந்ததிற்கு அடையாளமாக சர்ப்பத்தைச் சொல்லுவார்கள். சர்ப்பத்தைப் பார்த்தால் அது சீக்கிரமாய் மறையும். பாம்பு ஓடிக் கொண்டிருக்கும். திடீரென மறைந்துவிடும் அதுபோல: சர்ப்பம் கொண்டு வந்த பாவமும் நைசாக ஒளிக்கும். நாங்கள் பாவத்தை ஒளிப்பதால் ஒருபோதும் வாழ்வடையமாட்டோம். நீங்கள் செய்கிற பாவத்தை மற்றவர்கள் கண்டுபிடித்து சொல்லும்வரை இருக்க வேண்டாம். இப்போதே விட்டுவிடுங்கள். ஏவாள் கொடுத்த கனியைச் சாப்பிட்டு ஆதாம் பாவம் செய்தான். அதற்குப் பின்பு மாலையான குளிர்ச்சி நேரத்தில் தேவன் வரும்போது ஆதாம் ஒளிக்கிறான். ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய் என்று தேவன் கூப்பிடுகிறார். தேவன் வரப்போகின்றாரே. கொடுத்த கட்டளையை மீறிவிட்டேன். எப்படி தேவனுடைய முகத்தில் விழிப்பது என்று நினைத்தான். ஆனால் அறிக்கை செய்யவில்லை. தோட்டத்தின் விருட்சத்திற்குள் ஒளித்துக் கொள்கிறான். தான் ஒளித்தால் செய்த பாவம் மறைந்து போய்விடும் அல்லது தெரியாமல் போய் விடும். அது தேவனுக்குத் தெரியாது என்று ஆதாம் நினைத்தான். தாங்கள் பாவம் செய்து விட்டு மறைத்தால் அது யாருக்கும் தெரியாது என்ற மனநிலையுடன் அநேக தேவ பிள்ளைகள் இருக்கிறார்கள்.

ஒருவேளை நீங்கள் செய்தது போதகருக்கு, அப்பா, அம்மாவுக்கு, உங்களுடைய கணவன் அல்லது மனைவிக்கு, பிள்ளைகளுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் **"நீங்கள் செய்த பாவம் அது தேவனுக்குத் தெரியும்"**. அதுதான் இயேசு சொன்னார், உங்களில் குற்றம் இல்லாதவன் கல்லெறியட்டும் என்று. ஏனென்றால் இயேசு நிருபிக்கப்பட்ட பாவத்தையும், நிருபிக்கப்படாமல் செய்து கொண்டிருந்த பாவத்தையும் கண்டார். ஒருவர் கூறினார்: பலர் நல்லவர்களாக காணப்படுவதற்கு காரணம்: அவர்கள் செய்த தவறுகளுக்கு ஆதாரம் இல்லாதிருப்பதே!.

**தேவன் வாய்ப்பேச்சை யல்ல: உள்ளத்தில் வந்த எண்ணத்தையும்: எண்ணத்தால் வந்த செயலையும் பார்க்கிறார்.**

ஆண்டவர் ஆபேலுடைய காணிக்கையை ஏற்றுக் கொண்டார். காயீனுடைய காணிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் காயீனுடைய முகநாடி வேறுபட்டது. சந்தோஷமாக சகோதரனுடன் பேசி அவனைக் கூட்டிக் கொண்டு போய் கொலை செய்தான். இவனுடைய நடவடிக்கை அடாவடித் தனமானது. முரட்டுத்தனமானது. ஆதாம் பாவம் செய்துவிட்டு ஒளித்தான். காயீன் பாவத்தைச் செய்த பின்பும் கடினமாக இருந்தான். உன் சகோதரன் எங்கே என்று ஆண்டவர் கேட்ட போது அதற்கு காயீன் என் சகோதரனுக்கு காவாலாளியா? என்று கேட்டான். காயீன் கதையால் வெட்டி வீழ்த்தினான். செய்த பாவத்தை கதையால் மறுத்துவிட்டான். நான் இப்படிச் சொன்னால் சரி. தான் செய்ததை தேவன் காணமாட்டார் என்று காயீன் நினைத்தான். **ஆதியாகமம் 4:9 கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்: அதற்கு அவன்: நான் அறியேன்: என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான்.

காயீன் மனிதனுக்கு மறைக்கவில்லை. தன்னை உண்டாக்கின தேவனுக்கு என் சகோதரனுக்கு நான் என்ன காவலாளியா என்று மறுதலித்துச் சொன்னான். பாவம் செய்துவிட்டு எப்படித்தான் கதைத்தாலும் ஆண்டவருக்கு தெரியும். அது தான்: **ஆதியாகமம் 4:10 அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது**. என்று கேட்டார். "எவ்வளவு தான் பாவத்தை மறைத்தாலும், நிரூபிக்கப்பட முடியாது என்று சொன்னாலும் எல்லாம் தேவனுக்குத் தெரியும். தேவனாலே அதை நிரூபிக்க முடியும். எவ்வளவு தான் செய்யவில்லை என்று சொன்னாலும் நாங்கள் செய்த பாவம் செய்தது தான். செய்த தவறு செய்தது தான்". ஏனென்றால் தேவன் எல்லாம் அறிந்தவர். சர்வ ஞானம் உள்ளவர். எல்லாவற்றையும் காண்கிற கர்த்தர்.

யாரிடத்திலாவது மன்னிப்பு கேட்க வேண்டும் என்றால் நான் தவறிவிட்டேன். மன்னியுங்கள் என்று கேளுங்கள். மன்னிப்புக் கேட்பதால் எங்களுக்கு ஒரு நட்டமும் இல்லை. மன்னிப்புக் கேளாமல் இருப்பதால் எங்களுக்கு ஒரு மேன்மையும் இல்லை.

சிலர் உங்களுடைய வீட்டிற்குள் இருக்கும் அருவருப்பு, அசிங்கம் யாருக்கும் தெரியாது என்று நினைக்கிறீர்கள். ஆனால் கர்த்தருக்கு எல்லாம் தெரியும். நாங்கள் யாரோடு தொலைபேசியில் கதைக்கிறோம்? அது அம்மா அப்பாவுக்கு தெரியாது என்று நினைக்கிறோம். அதை யாரால் நிரூபிக்க முடியும் என்று சொல்லி வாயால் வெட்டி விழுத்த முடியும். நான் அப்படி இல்லை என்று அறிக்கை செய்யலாம். ஆனால் அது பரம தகப்பனுக்குத் தெரியும்.

இது ஆவிக்குரிய யுகம். எங்களுடைய சிந்தனை, சொல், செயல் எல்லாம் கர்த்தரால் கணிக்கப்படுகிறது. அவர் எல்லாவற்றையும் பார்க்கிறார். ஒன்றையும் மறைக்க வேண்டாம். எங்களுடைய அசுத்தமான தொடர்புகளை விட்டுவிடுவோம். யாருக்கும் தெரியாது என்று நினைக்க வேண்டாம். காயம் வராமல் அடித்திருப்போம். யார் நிரூபிப்பது என்று நினைக்க வேண்டாம். எல்லாவற்றையும் தேவன் ஒருநாள் நிரூபிப்பார். அறிக்கை செய்து வெளியேவந்தால் தப்பிவிடுவோம். யாருக்கும் தெரியாமல் இருந்தால் இன்றைக்கு புரிந்து கொள்ளுங்கள். கர்த்தருக்கு எல்லாம் தெரியும்.

பவுலின் அறிக்கை: பிரமாணத்தின்படி குற்றஞ்சாட்டப்பட முடியாதவன். ஆனால் நான் பிரதான பாவி என்கிற ஆவிக்குரிய மாற்றத்துக்கு உட்பட்டான். நான் பிரமாணத்தின்படி வாழ்கிறேன் என்ற நினைப்புடைய பரிசேயனை நீதிமானாக இயேசுவால் காண முடியவில்லை.

விபச்சாரத்தில் ஈடுபட்ட பெண்ணைக் கையும்மெய்யுமாகப் பிடித்தவர்கள் கண்டுபிடிக்கப்படாமல் பாவம் செய்கிறவர்கள் என்பதை இயேசு காண்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளித்துக் கொள்வதால் தப்ப முடியும் என ஆதாம் நினைத்தான். ஆனால் தேவன் அவனைக் கண்டார்.

வாயால் வெட்டி வீழ்த்திய காயீனும் கண்டுபிடிக்கப் பட்டான்.

எம் நினைவுகள், எண்ணங்கள், பார்வைகள் அனைத்தும் மற்றவர்களால் அறியமுடியாதபடி நாம் பாவம் செய்யக்கூடிய பகுதிகளாகும். இவை அனைத்தையும் தூய்மையான நிலையோடு வைத்திருக்க வேண்டும். இது கடைசிக் காலம். இயேசு தன் பிள்ளைகளை (மணவாட்டி சபையை) எடுத்துக் கொள்ள வரப்போகின்றார். எமது உள்ளான தூய்மையில் கவனமெடுப்போம். நாமெல்லாரும் தேவனுடைய நியாயசனத்துக்கு முன் நிற்க வேண்டும் **(வெளிப் படுத்தல் 20:12)**. எமது முழு வாழ்வின் செயலும் தேவனுக்கு வெளிச்சமாகத் தெரியும். இப்போதே நிரூபிக்க முடியாத பாவங்களையும் அறிக்கை செய்து மெய் தூய்மையை அடைந்திருப்போம். எழுத்தின்படி நிரூபிக்கப்படாவிட்டாலும் ஆவியின்படி பாவியாக இருப்பதை வெறுத்து எழுத்தின்படி நிரூபிக்கப்படாவிட்டாலும் ஆவியின்படி பரிசுத்தவான்களாக வாழ்வோம்.

**"தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"**

அன்பின் வாசகர்களே!
மலரப்போகும் புதிய ஆண்டில் உங்கள் வேதாகம அறிவை மேலும் வளப்படுத்தும் நோக்குடன், வினாவிடை, குறுக்கெழுத்துப் போட்டி என்பவற்றில் பங்குபற்றி சிறப்பாக விடையளிக்கும் ஒருவருக்கு பரிசில் காத்திருக்கின்றது...

**பரமனின் சேவையில் பக்குவப்பட்டவர்கள் பாரினில் பயணிக்கையிலேயே தேவ நோக்கத்தை நிறைவேற்றுவார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவன் தந்த வைரங்கள்

- மாம்ச வழிமுறைகளால் ஆவிக்குரிய இலக்குகளை அடைய முடியாது.
- தேவையுள்ள ஆத்துமாவுக்கு உதவ நாம் தேவனுடைய வார்த்தையைக் கொடுக்க வேண்டும்.
- அனுபவங்கள் எல்லாம் சத்தியங்கள் அல்ல. ஆனால் சத்தியங்களெல்லாம் அனுபவங்களாகலாம்.
- பரிசுத்தத்தில் உறுதியுள்ளவர்கள் பரிசுத்தரைத் தரிசிப்பது உறுதி.
- இன்னொருவர் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுப்பதே கனக்குறைவு என கிறிஸ்தவர்கள் (ஊழியர்கள்) கருதினால் மற்றவர்களின் கால்களைக் கழுவுவதற்கு எப்படித் தண்ணீர் எடுப்போம்.
- இயேசுவுக்கு பூமியிலே சொந்த வீடும் இல்லை வாடகை வீடும் இல்லை
- இருந்ததெல்லாம் இழந்து கிறிஸ்தவனாக வாழ்ந்தது அந்தக்காலம். கிறிஸ்தவனாகி எல்லாம் சேர்க்கத் துடிப்பது இந்தக்காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற
விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும்
விலாசத்தையும் தெளிவாக எழுதி
சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால்
சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| **இலங்கை** | S.L Rs 220.00 Per Year |
| **இந்தியா** | S.L Rs 390.00 Per Year |
| **கனடா, அமெரிக்கா** | S.L Rs 840.00 Per Year |
| **சிங்கப்பூர், மலேசியா** | S.L Rs 420.00 Per Year |
| **மத்திய கிழக்கு நாடுகள்** | S.L Rs 510.00 Per Year |
| **ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா** | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

**சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்**

## சந்தா கூப்பன்

பெயர்:-.................................................................

விலாசம்:-.................................................................


.................................................................

.................................................................

.................................................................

**தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



To: ............................................................

............................................................

............................................................

............................................................

............................................................

**Zion Church Office,**

**No. 347, Navalar Road,**

**Jaffna, Srilanka.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org